*Summaries in Tamil*
*Intervention 2006, Volume 4, Number 2, Page 180 - 182*

# Summaries in Tamil

**ஆயுத முரண்பாடு நடைபெறும் பிரதேசங்களில் உளவளத் துணையாளர்களையும், உளசமூகப் பணியாளர்களையும் பயிற்றுவிப்பவர்களுக்குப் பயிற்சியளித்தல்: சில அடிப்படையான கொள்கைகள்**

ஆயுத முரண்பாடு நடைபெறும் பிரதேசங்களிலே, உளவளத் துணையாளர்கள், உளசமூகப் பணியாளர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொழுது, பயிற்சியினுடைய பிரதான தொனிப்பொருளுக்கும், பயிற்சியாளரினால் கையாளப்படும் கற்பித்தல் முறைமைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி ஒரு தெளிவான பார்வை தேவைப்படுகின்றது. இந்தக் கட்டுரை உளவளத் துணையாளர்கள், உளசமூகப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பவர்களுக்கான நேரடிப் பயிற்சியினுடைய பாடவிடயம், கற்பித்தல் முறைமைகள் மற்றும் ஏனைய பிரதான விடயங்களைப் பற்றி விவரிக்கின்றது. இங்கு குறிப்பிடப்படும் அணுகுமுறையானது, பயிற்சியாளருக்கும் பயிற்றுவிப்பவருக்குமிடையே ஏற்படுகின்ற ஒரு தனிப்பட்ட உறவு பற்றியதாக அமைகின்றது. மேற்படி உறவானது, அந்த இருவருமே தங்களது புலமையை விருத்தி செய்ய உதவுகின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** நேரடியான பயிற்சி, புலமை விருத்தி, அடிமட்ட உளவளத் துணையாளர்கள், ஒரு பயிற்சியினுடைய பிரதான தொனிப்பொருள், உளசமூகப் பணியாளர்கள், பயிற்சி முறைமைகள்

**பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல் (TOT): யுத்தம், வன்முறை மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இடம்பெறுகின்ற உளசமூக, உளநலத் தலையீடுகளுக்கான ஒரு சர்வதேச அணுகுமுறை**

இந்தக் கட்டுரையிலே, யுத்தம், வன்முறை மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்குப் பின்னரான சூழலில் உளசமூக மற்றும் உளநலத் தலையீடுகளை மேற்கொள்ளும் குழுக்களைப் பயிற்றுவிப்பதை இலக்காகக் கொண்ட பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள் விவரிக்கப்படுகின்றன.

**முக்கியமான சொற்பதங்கள்:** TOT, பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல், பயிற்சியளித்தல், மேற்பார்வை, உளசமூகம், உளநலம், தலையீடுகள், சர்வதேசம், வன்முறை, இயற்கை அனர்த்தங்கள்

---

**முரண்பாட்டிற்குப் பிந்திய சூழல் ஒன்றிலே இருக்கும் கனவுகளும், பயங்கரக் கனவுகளும் நிறைந்த சமூக உலகம்: மத்திய மொசாம்பியாவின் கொறங்கோசா உதாரணம்**

இந்தக் கட்டுரையானது, மத்திய மொசாம்பிய மக்களினது கனவுகளை விளங்கிக்கொள்வதற்கான சமூக - கலாசார அறிமுறைகளை விளக்குகின்றது. பொதுவாகக் கனவுகள் சமூக உலகத்தை ஒழுங்கு செய்வதற்குப் பிரயோகிக்கக்கூடிய முக்கியமான தகவல்களைப் பரிமாறுகின்ற ஒன்றாகவே கருதப்படுகின்றன. நீண்டுகொண்டிருக்கும்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

உள்நாட்டு யுத்தமானது இந்தக் கனவுத் தொகுதிகளில் - அவற்றை மொழிமாற்றம் செய்வதில் இன்னொரு பரிமாணத்தைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் - தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** கனவுகள், பயங்கரக்கனவுகள், தொடர்பாடல், அனுபவங்கள், மொசாம்பியா

இரட்டை இலக்குகள் திறன்படவும், ஒழுக்க விதிமுறைகளுக்குள்ளும் இணைத்துக் கொள்ளக்கூடியவை என்பதை இந்தக் கட்டுரை கோடிகாட்டுகின்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** ஆயுத முரண்பாடு, வறுமை, உளசமூகத் தலையீடுகள்

---

## முரண்பாடு நடைபெறுகின்ற பிரதேசங்களில் வறுமை ஒழிப்பையும், உளசமூகத்தலையீடுகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ளல்

இந்தக் கட்டுரையானது, சிறீலங்காவினது மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுபவர்களிடம் வளர்ந்து வருகின்ற, வறுமை ஒழிப்பு மற்றும் உளசமூக ஆதரவு வழங்கல் என்பவற்றின் இலக்குகளை இணைத்துக் கொள்ளல் பற்றிய ஆர்வங்களுக்கான எதிர்வினையாக அமைந்திருக்கின்றது. சர்வதேச மட்டங்களில் பரந்து காணப்படும் உளசமூகப் பரப்புகளிடையே இதனை அடையாளங் காணும் அதேவேளை, உள்ளூர் மட்டத்திலே, சிறீலங்காவின் தரவுகளைப் பாவித்து, முரண்பாடு நடைபெறுகின்ற பிரதேசங்களிலே உளசமூகத் துன்பங்களுக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பையும் வெளிப்படுத்துகின்றது. மேலும், இந்தக் கட்டுரை உளசமூக – வறுமை ஒழிப்புத் திட்டங்கள் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு புதிய தலைமுறைத் தலையீடுகளை விவரிப்பதுடன், அவற்றின் பின்னணியிலுள்ள காரணகாரியங்களையும், நடைமுறைகளையும் பற்றி விமர்சனப்பாங்காக மதிப்பிடவும் செய்கின்றது. இறுதியாக, உளசமூக ஆதரவு – வறுமை ஒழிப்பு என்னும்

---

## தொடர்ந்து கொண்டிருக்கும் மனவடுச்சூழலில் உள்ள இளஞ்சிறார்களுடன் ஆக்கத்திறனோடு வேலைசெய்தல்

இந்தக் கட்டுரை, தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு மனவடுச்சூழலிலே, இளம் சிறுவர்களுடன் ஊக்குவிப்பாளர்களாகத் தொழிற்படுகின்ற சிகிச்சையாளர் குழாம் ஒன்றின் அனுபவங்களைப் பகிர்ந்து அதனை ஆவணப்படுத்துகின்றது. மேலும் இந்தக் கட்டுரை, மிக இளம்வயதிலேயே அளவுக்கு மீறிய மனவடு அனுபவங்களைச் சுமந்துகொண்டு, தங்களைச் சூழவுள்ள உலகின்மீதான நம்பிக்கையில் அச்சுறுத்தலோடு வாழுகின்ற சிறுவர்களோடு எவ்வாறு ஆக்கத்திறனோடு வேலைசெய்வது என்பது பற்றி ஆராய்கின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** சிறுவர், குழுவேலை, பங்காண்மை, மனவடு, சமுதாய அடிப்படையிலான தலையீடு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

*Intervention 2006, Volume 4, Number 2, Page 180 - 182*

**சிறீலங்காவின் சுனாமிக்குப் பின்னரான உளசமூக விளையாட்டுத்திடல்: எதிர்காலத்திலே அனர்த்தங்களைத் தொடர்ந்து வருகின்ற உளசமூகத் திட்டமிடல்களுக்கும், தலையீடுகளுக்குமான பாடங்கள்**

இந்தக் கட்டுரை, சிறீலங்காவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவென உள்ளூர் மற்றும் சர்வதேசிய குழக்களினால் தொடங்கப்பட்ட பொருத்தமற்ற, கலாசாரத்தோடு இணையாத மற்றும் முரண்பாடு தொடர்பான அறியாமையோடு முன்னெடுக்கப்பட்ட தலையீடுகளின் உதாரணங்களை ஆராய்கின்றது. மானுட இரக்கமானது, வினைத்திறனோடு கூடிய உளசமூகத்திட்டமிடலோடு - விசேடமாக வளவாளர்கள் குறைவானதொரு பின்புலத்திலே இவ்வாறான தலையீடுகளைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளும் நிலைமைகளிலே - சமநிலைப்படுத்தப்பட வேண்டும்.

**முக்கியமான சொற்பதங்கள்:**
சுனாமி, உளசமூகத் தலையீடுகள், உளவளத்துணை, மனிதாபிமான ஒழுக்கக் கோட்பாடுகள், இயற்கை


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.